


துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் விநாயகமூர்த்தியின் தங்கையும் – சென்னை மாநகராட்சியின் 174ஆவது வார்டு மாமன்ற உறுப்பினருமான ம.ராதிகா – சீனிவாசன் ஆகியோரின் மகள் நிவேதா – ரா.கலைவாணன் இணையரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் அமைச்சர் மா.சுப்பிரமணியன், கனிமொழி என்.வி. சோமு எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் காரம்பாக்கம் க.கணபதி, எ.எம்.வி.பிரபாகரராஜா, பகுதிப் பொறுப்பாளர் வே.ஆனந்தன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு 30.08.2025 அன்று நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் நேரடி நியமனம் மூலம் பணி நியமனம் செய்யப்பட்டுள்ள பணியாளர்களுக்கான அடிப்படை பயிற்சி வகுப்புகளை வண்டலூரில் உள்ள தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் தொடங்கி வைத்து அவர்களுடன் குழுப் புகைப்படம் எடுத்துக் கொண்டார். இந்நிகழ்வில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், க.செல்வம் எம்.பி., திருமதி வரலட்சுமி எம்.எல்.ஏ., மதுசூதனன், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழக மேலாண்மை இயக்குநர் ஹனிஷ் சப்ரா, தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத்தின் நிருவாக இயக்குநர் கே.விவேகானந்தன், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், நகராட்சி நிர்வாக இயக்குநர் பி.மதுசூதன் ரெட்டி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், பேரூராட்சிகளின் இயக்குநர் எம்.பிரதீப் குமார், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் திருமதி தி.சினேகா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செப். 4, 5 - ல் நடைபெறுகிறது! சுயமரியாதை இயக்கத்தை உலகமயமாக்கும் நோக்குடன்

# ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் 2 நாள் மாநாடு! முதல்வர் உரையாற்றுகிறார்!

## கழக செய்தித் தொடர்பாளர் வழக்கறிஞர் மனுராஜ் சண்முகசுந்தரம் பேட்டி!

சென்னை, செப். 2-

'தி இந்து' ஆங்கில நாளேட்டுக்கு தி.மு.க.வின் செய்தித் தொடர்பாளர் வழக்கறிஞர் மனுராஜ் சண்முகசுந்தரம் அளித்த பேட்டி வருமாறு:-

“தமிழ்நாட்டில் வேரூன்றியிருந்த ஜாதிய, பாலின ஏற்றத் தாழ்வுகளை எதிர்கொண்டு, அதன் சமூக அரசியல் நிலப்பரப்பை மாற்றியமைத்த சுயமரியாதை இயக்கத்தை உலகமயமாக்கும் நோக்குடன் இங்கிலாந்தில் உள்ள செயின்ட் அந்தோணி கல்லூரியும், பெல்லியோல் கல்லூரியும் இணைந்து ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் செப்டம்பர் 4, 5 ஆகிய தேதிகளில் இரண்டு நாள் மாநாட்டை ஒருங்கிணைத்துள்ளன.

இந்த மாநாட்டில் பல் துறைகளைச் சேர்ந்த முன்னணி அறிஞர்களும், வல்லுநர்களும் பங்கேற்கின்ற னர்.

அரசியல் மற்றும் தத்துவ நெறிமுறையாகத் தொடரும் 'சுயமரியாதை'க் கருத்தியலின் உலகளாவிய பொருத்தத்தை இம்மாநாடு ஆராயும்.

இது திராவிட அனுபவத்தை பன்னாட்டுக் குடிமை உரிமைப் போராட்டங்கள், நிறவெறிக்கு எதிரான போராட்டங்கள் முதல் இன்றைய அமைப்பு ரீதியான ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிரான சமகால அணிதிரட்டல் வரை ஒடுக்குமுறைக் கட்டமைப்புகளுக்கு அறைகூவல் விடுத்து அவற்றை தலைகீழாகப் புரட்டிப் போடும் இயக்கங்களுடன் ஒப்புநோக்கி உரையாடலை முன்வைக்கும்.

**புத்தகங்கள்:**
**முதல்வர் வெளியிடுகிறார்!**

செப்டம்பர் 4 ஆம் நாள், சுயமரியாதை இயக்கத்தின் நூறு ஆண்டுப் பயணத்தையும் சமூகத்தை வடிவமைப்பதில் அதன் சமகால பொருத்தப்பாட்டையும் எடுத்துக்காட்டும் இரண்டு புத்தகங்களை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிடுவார்.

செப்டம்பர் 5 ஆம் தேதி லண்டனில் இந்திய மாணவர்களுடனும், பட்டதாரிகளுடனும் முதலமைச்சர் உரையாடுவார் என்றும் வழக்கறிஞர் மனுராஜ் சண்முகசுந்தரம் தெரிவித்துள்ளார்.

பத்திரிகையாளர்களின் கோரிக்கையை நிறைவேற்றிய முதல்வர் - துணை முதல்வருக்கு

# தமிழ்நாடு பிரஸ் அண்ட் மீடியா ரிப்போர்ட்டர்ஸ் யூனியன் சார்பில் நன்றி!

## மாநிலத் தலைவர் மு.சிவதமிழன் அறிக்கை!

சென்னை, செப். 2 -

பத்திரிகையாளர்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் ஆகியோருக்கு டி.என்.பி.எம்.ஆர்.யூ. மாநிலத் தலைவர் டாக்டர் மு.சிவதமிழன் நன்றி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தமிழ்நாடு பிரஸ் அண்ட் மீடியா ரிப்போர்ட்டர்ஸ் யூனியன் மாநில தலைவர் டாக்டர் மு.சிவதமிழன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதல்வரின் அறிவிப்பின்படி இனி தொலைக்காட்சி, நாளிதழ், பருவ, மாத இதழ் பத்திரிகையாளர் அனைவரும் நல வாரிய உறுப்பினராகலாம் என்கிற அறிவிப்பு இது வரை எந்த அரசும் தராத ஒரு அற்புதமான அறிவிப்பாகும்.

அரசு அங்கீகார அட்டை, அரசு அடையாள அட்டை, பேருந்து பயண அட்டை ஆகிய அடையாள அட்டை இல்லாத பத்திரிகையாளர்களும் பத்திரிகையாளர் நல வாரியத்தில் உறுப்பினராகச் சேர்க்க வேண்டுமென்ற நமது கோரிக்கையை கனிவோடு பரிசீலித்து வட்டார நிருபர்கள் உட்பட அனைவரும் நலவாரிய உறுப்பினராக இணைய முடியும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசு அறிவித்துள்ளது.

மேலும் கடந்த ஆக.14ந் தேதி நடைபெற்ற நல வாரியக் குழுவின் 9வது கூட்டத்தில், ஆசிரியர் குழுவில் (எடிட்டோரியல் போர்ட்) உள்ள அனைவரும் உறுப்பினராகலாம் என்று இறுதி செய்யப்பட்டது.

இதற்கான விண்ணப்பம் தற்போது வெளியிடப்பட்டு, மாவட்ட மக்கள் தொடர்பு அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. செய்தி மக்கள் தொடர்புத் துறை இணையதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

நலவாரிய உறுப்பினராக இணைவதற்கான தகுதிகள் மற்றும் விவரங்கள், எவரெல்லாம் உறுப்பினராக சேரலாம் என்பன உள்ளிட்ட விவரங்கள் விரிவாக விண்ணப்பம் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சென்னையில் உள்ளவர்கள், தலைமைச் செயலகம், செய்தி வெளியீட்டுப் பிரிவிலும் மற்றும் பிற மாவட்டங்களில் உள்ளவர்கள் மாவட்ட ஆட்சியரக செய்தி மக்கள் தொடர்பு அலுவலகத்திலும் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

தொலைக்காட்சி, நாளிதழ், பருவ, மாத இதழ், பத்திரிகையாளர்கள், வட்டார நிருபர்கள் என அனைவரும் நல வாரியத்தின் கீழ் வரலாம் என்கிற அறிவிப்பினை தந்த தமிழ்நாடு அரசுக்கும், பத்திரிகையாளர்களின் நலன்பேணும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சுவாமிநாதன் அவர்களுக்கும் டி.என்.பி.எம்.ஆர்.யூ. சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் பாண்டிச்சேரியில் 1.9.2025 அன்று நடைபெற்ற புதுவதேசம் மற்றும் டி.என்.பி.எம்.ஆர்.யூ. நடத்திய 15வது ஆண்டுவிழா மாநாட்டில் சிறப்பு நன்றி அறிவிப்பு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இவ்வாறு தமிழ்நாடு பிரஸ் அண்ட் மீடியா ரிப்போர்ட்டர்ஸ் யூனியன் மாநில தலைவர் டாக்டர் மு.சிவதமிழன் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட
முத்தமிழறிஞர் கலைஞரின் 102–வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு

# சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!



அகரம் மற்றும் தாடிக்கொம்பு பேரூர்,
திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.



சாயல்குடி பேரூர்,
இராமநாதபுரம் மாவட்டம்.



திருப்புவனம் மேற்கு ஒன்றியம்,
சிவகங்கை மாவட்டம்.



வீரவநல்லூர் பேரூர்,
திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்



குளித்தலை மேற்கு ஒன்றியம்,
கரூர் மாவட்டம்.



சூலூர் மேற்கு ஒன்றியம்,
கோவை தெற்கு மாவட்டம்.



தெள்ளார் மேற்கு ஒன்றியம்,
திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்.



கீழ்பென்னாத்தூர் வடக்கு ஒன்றியம்,
திருவண்ணாமலை தெற்கு மாவட்டம்.



கணியம்பாடி ஒன்றியம்,
இராணிப்பேட்டை மாவட்டம்.